**சுருக்கம்**

பெயர் சூட்டுதல் – சென்னை மாவட்டம் – சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தியாகராயர் நகர், மண்டலம் – 7 மற்றும் 8, வார்டு எண்.113 மற்றும் 126 ல் உள்ள கோபதி நாராயண சாலை – திருமலை சாலைச் சந்திப்பு மேம்பாலத்திற்கு ''கலைவாணர் மேம்பாலம்'' என பெயர் சூட்டிட அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை**

அரசாணை (நிலை) எண்.11 நாள்: 23.01.2009

தை – 10,
திருவள்ளுவர் ஆண்டு – 2039,

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.113, நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் (மாந2) துறை, நாள் 30.06.1998
2. அரசாணை (ப) எண்.573, நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் (நநி5) துறை, நாள் 14.12.2001.

**மேலும் படிக்க:**

3. சென்னை மாநகராட்சி ஆணையர் கடித எண்.நி.ம.உ.து.ந.க.எண். எல்இ1/057/2009, நாள் 09.01.2009

* * * * * *

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 29.12.2008 அன்று சென்னை தியாகராயநகரில் கோபதி நாராயண சாலை – திருமலை சாலைச் சந்திப்பு மேம்பாலம் திறப்பு விழா நிகழ்ச்சியின் சிறப்புரையில் கீழ்கண்டவாறு அறிவித்து இருந்தார்.

> ''இன்றைய தினம் இங்கே திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற இந்தப் பாலத்திற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்தேன். அருகில் அண்ணா மேம்பாலம் இருக்கிறது. கலைவாணர் என்.எஸ்.கே.வினுடைய சிலையை இங்கே அமைத்தவர் அண்ணா. சிறப்பாக அந்த நினைவாகவும், என் தலைமையிலே நடைபெற்ற அந்த விழாவில் அண்ணா அவர்களுடைய வாழ்க்கையில் கடைசி நிகழ்ச்சியாக கலைவாணருடைய சிலையை இந்தச் சாலையிலே தான் திறந்து வைத்தார் என்பதற்காகவும், அந்தச் சாலையை இணைக்கின்ற இந்தப் பாலத்திற்கு ''கலைவாணர் மேம்பாலம்'' என்ற பெயரைச் சூட்டி விடைபெறுகின்றேன்''

2. சென்னை மாநகராட்சி ஆணையர் மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மான எண்.696/2008, நாள் 30.12.2008 ல் மண்டலம் – 7 மற்றும் 8, வார்டு – 113 மற்றும் 126 ல் உள்ள கோபதி நாராயண சாலை – திருமலை சாலைச் சந்திப்பு மேம்பாலத்திற்கு ''கலைவாணர் மேம்பாலம்'' என பெயர் சூட்டுவதற்கு அரசின் ஆணை வேண்டி அரசுக்கு முன்மொழிவு அனுப்ப மன்றம் அனுமதி அளித்துள்ளது எனவும், எனவே இதற்கு அரசின் ஆணை வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதலாவதாக மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு ஆணைகள் நடைமுறையில் உள்ள சூழ்நிலையில், சென்னை மாநகராட்சி ஆணையரது முன்மொழிவினை அரசு கவனமுடன் பரிசீலீனை செய்தது. அதனடிப்படையில் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தியாகராயர் நகர், மண்டலம் – 7 மற்றும் 8, வார்டு எண்.113 மற்றும் 126 ல் உள்ள கோபதி நாராயண சாலை – திருமலை சாலைச் சந்திப்பு மேம்பாலத்திற்கு ''கலைவாணர் மேம்பாலம்'' என பெயர் சூட்டிட சென்னை மாநகராட்சிக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
சென்னை மாவட்ட ஆட்சியர், சென்னை – 1.
காவல்துறை ஆணையர், சென்னை – 8

நகல்:
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர் (திரு.கே.ஆர்), சென்னை – 9
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
தலைமைச் செயலரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2)துறை, சென்னை – 9
இருப்ப கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்